සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கை பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான
வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2017(I) (2019)

Efficiency Bar Examination for Officers in Grade II of Audit Examiners' Service -2017 (I) (2019)

(01) கணக்கியல்
Accounting

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

1. (i) அரச கூட்டுத்தாபனம் ஒன்றினது அல்லது கம்பனி ஒன்றினது வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ளப்படவேண்டிய "கணக்கீட்டுக் கொள்கைகள்" என்பதனால் நீங்கள் விளங்கிக் கொள்வது யாது என்பதனைக் கூறி அதற்கு உரித்தான கணக்கீட்டு எடுகோள்கள் **நான்கினை** சுருக்கமாக விளக்குக. *(15 புள்ளிகள்)*

   (ii) நிறுவனம் (entity) ஒன்றினது நிதிக்கூற்றினூடாக முன்வைக்கப்படும் தகவல்களைப் பயன்படுத்துகின்ற பிரதானமான **ஐந்து** பிரிவினரைச் சுட்டிக் காட்டி, அவர்களால் பெற்றுக்கொள்ளக்கூடிய தகவல்கள் **ஐந்தினையும்** சுருக்கமாக விளக்குக. *(15 புள்ளிகள்)*

2. கீழ்க் காணப்படும் புள்ளிவிபரங்கள் மற்றும் விகிதாசாரங்களைப் பயன்படுத்தி, இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் இல. 3 இன்படி, கூட்டுத்தாபனம் ஒன்றின் 2018 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் வருடத்துக்கான வருமானக்கூற்று மற்றும் 2018 டிசெம்பர் 31 ஆம் திகதியன்றான ஐந்தொகை என்பனவற்றைத் தயாரிக்குக.

- 2018 ஆம் வருடத்துக்கான விற்பனைகள் ரூ. 420 000 000
- 2018 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று மொத்த சொத்துக்கள் ரூ. 270 000 000
- மொத்த இலாபம் விற்பனைகளின் 25% ஆகும்.
- இலாபத்திற்கு முன்னரான வரி விற்பனைகளின் 10% ஆகும்.
- செயற்பாட்டு செலவீடுகளில் நிர்வாகச் செலவீடுகள், விற்பனை விநியோகச் செலவீடுகள் மற்றும் ஏனைய செலவீடுகள் முறையே 3 : 2 : 1 எனும் விகிதாசாரப்படி அமைந்துள்ளன.
- வருமான வரி, தேறிய இலாபத்தில் 25% மாக அமையும்.
- நடைமுறையற்ற சொத்துக்கள் மீதி கொண்டு வரப்பட்ட பெறுமதி (Carrying amount) மொத்த சொத்துக்களில் 60% மாக இருப்பதுடன் காணியும் கட்டிடமும், இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் என்பனவற்றின் பெறுமதி முறையே 3:2:1 எனும் விகிதாசாரப்படி அமைந்துள்ளன. 2018 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் என்பனவற்றுக்கு திரட்டிய பெறுமானத்தேய்வுப் பெறுமதி முறையே ரூ. 21 600 000 மற்றும் ரூ. 10 800 000 ஆகும். கட்டிடங்கள் பெறுமானத் தேய்வற்றவை.
- நடைமுறைச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளவை இருப்புக்கள், கடன்பட்டோர் மற்றும் காசும் காசுக்கு சமனானவை என்பவை முறையே 3 : 2 : 1 எனும் விகிதாசாரத்தில் அமைந்துள்ளன.
- நடைமுறை விகிதம் (நடைமுறைச் சொத்துக்களுக்கு நடைமுறைப் பொறுப்புக்கள்) 2 : 1 எனும் விகிதாசாரத்திலுள்ளன.
- நடைமுறைப் பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளவை கடன்கொடுத்தோர் மற்றும் சென்மதி செலவுகள் முறையே 2 : 1 விகிதாசாரத்தில் அமைந்துள்ளன.
- மூலதனம் மொத்த சொத்துக்களில் 40% மாகவும் நீண்டகாலக் கடன் மீதி மொத்தச் சொத்துக்களில் 20% மாகவும் காணப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டுக்கான முன்கொண்டுவரப்பட்ட இலாபம் பொது ஒதுக்கங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது.

*(30 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

**3.** (i) "அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குத் தரவுகள் மற்றும் தகவல்கள், குறித்த நிறுவனங்கள் சரியான நிதி முகாமைத்துவத்தினைப் பின்பற்றுகின்றனவா என்பதனைக் காட்டுகின்றன."
பிரதான அம்சங்கள் **ஐந்தினை** எடுத்துக் காட்டி இவற்றினை கலந்துரையாடுக. *(15 புள்ளிகள்)*

(ii) முற்பணக் கணக்கு செயற்பாடுகளுக்கு உரிய **நான்கு** எல்லைகளைச் சுருக்கமாகக் குறித்துக் காட்டி, பொதுவாக முற்பண செயற்பாட்டு நடைமுறையின் போதும், கணக்கு வைக்கும் போதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டிய அம்சங்கள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக. *(15 புள்ளிகள்)*

**4.** (i) அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலான வரவு செலவுத் திட்டங்களை வகைப்படுத்தும் போது பயன்படுத்தப்படும் தலைப்பு, நிகழ்ச்சித்திட்டம், செயற்றிட்டம் மற்றும் செலவீட்டுக் குறியீடு (Expenditure code) என்பனவற்றைச் சுருக்கமாக விளக்குக. *(12 புள்ளிகள்)*

(ii) திரட்டு நிதியிலிருந்து பணத்தினைச் செலவு செய்வதன் பொருட்டு, நிதியமைச்சரின் கையொப்பத்துடன் வழங்கப்படும் ஆணைச்சீட்டு (warrants) வகைகள் **ஐந்தினை** சுருக்கமாக விளக்குக. *(18 புள்ளிகள்)*

**5.** சிறுகுறிப்புகள் எழுதுக.

(i) மீள் செலுத்தப்படக்கூடிய வெளிநாட்டு உதவிகள்

(ii) அரசாங்க ஒதுக்கீட்டுக் கணக்கு

(iii) மாகாண சபைகளது எதிர்பாராத நிதியம்

(iv) மேலதிக கட்டணம் (Surcharge)

(v) வெளிநாட்டு உதவி மதிப்பீட்டு ஒதுக்கீடும் அதன் செலவீடுகளும்

*(06 × 5 = 30 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கை பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2017(I) (2019)**

Efficiency Bar Examination for Officers in Grade II of Audit Examiners' Service -2017 (I) (2019)

**(02) கணக்காய்வு**
Auditing

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

---

**1.** (i) கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் நன்மைகளையும் தீமைகளையும் விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) விற்பனைகளுக்கும், கடன்பட்டோர்களுக்குமான ஓர் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தினைத் தயாரிக்குக. *(20 புள்ளிகள்)*

**2.** (i) கணக்காய்வு எண்ணக்கருவிற்கமைய "உண்மையான மற்றும் செம்மையானதுமான நிதிக்கூற்றுக்கள்" என்பதனால் கருதப்படுவது யாது? *(15 புள்ளிகள்)*

(ii) கணக்காய்வில் கணக்காய்வாளரினால் பயன்படுத்தப்படும் வலியுறுத்தல்கள் (assertion) எவை? *(15 புள்ளிகள்)*

**3.** (i) நகராட்சிமன்ற ஒழுங்கு விதிமுறையினால் கணக்காளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் எவை? *(10 புள்ளிகள்)*

(ii) அரச கூட்டுத்தாபனங்களின் கணக்காய்வு அறிக்கையில் அடங்கியுள்ள விடயங்களை விபரிக்குக. *(20 புள்ளிகள்)*

**4.** (i) முற்பணக் கணக்குகளிற்கு உரிய அதிகாரமளிக்கப்படாத வேலை நட்டங்களினையும், கணக்காய்வு அதிபதியின் கடமைகளையும் விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கின் கணக்காய்வின் போது அவதானிக்கப்படக்கூடிய வழுக்களை விளக்குக. *(10 புள்ளிகள்)*

(iii) "கணக்கீட்டுப் வழுக்கள் (Errors)" என்றால் என்ன என்பதனை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

**5.** சிறுகுறிப்பு எழுதுக.

(i) கணக்காய்வாளர்களின் தொழில்சார் பொறுப்பினை ஆட்சி செய்யும் நெறிமுறையான கொள்கைகள்

(ii) பொருளுண்மையான தவறான அறிக்கைகளினை கண்டறிவதில் கணக்காய்வாளரின் திறனினை பாதிக்கும் உள்ளார்ந்த வரையறைகள்

(iii) உள்ளக கணக்காய்வு முறைமை ஒன்றின் பகுதிகள்

(iv) வேலைகளைப் பகிர்ந்தளித்தல்

(v) பரிமாற்றம் அல்லாத கொடுக்கல் வாங்கல்கள்

*(06 × 5 = 30 புள்ளிகள்)*

***

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
*All Rights Reserved]*

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கை பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2017(I) (2019)**

Efficiency Bar Examination for Officers in Grade II of Audit Examiners' Service - 2017 (I) (2019)

**(03) நிதி ஒழுங்குவிதிகள்**
Financial Procedure

**இரண்டு மணித்தியாலங்கள்**
Two hours

**எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

**1.** அரசாங்க நிதி சம்பந்தமாக 1978 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் அரசியல் யாப்பில் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை விபரிக்குக. *(15 புள்ளிகள்)*

**2.** "நிதி ஆண்டு நிறைவுற்று மூன்று மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் திறைசேரி செயலாளரினால் அரசாங்க நிதிக்கூற்றினை கணக்காய்வாளர் நாயகத்துக்கு முன்வைக்கப்படல் வேண்டும்."
'அரசாங்க நிதிக்கூற்று' என்பதில் உள்ளடக்கப்படும் அறிக்கைகள் எவையென்பதை குறிப்பிடுக. *(14 புள்ளிகள்)*

**3.** 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திற்கிணங்க மேலதிக கட்டணம் தொடர்பில் பிரதம கணக்கீட்டு அதிகாரியினால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுங்கு செயன்முறையைக் குறிப்பிடுக. *(14 புள்ளிகள்)*

**4.** 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்திற்கிணங்க கணக்காய்வாளர் நாயகத்தினால் அரசாங்க கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான சபைகளை கணக்காய்வுகள் செய்தல் தொடர்பாக,
 (i) கணக்காய்வு நடவடிக்கையில் பரிசீலனைக்குட்படுத்தப்படும் துறைகள் *(06 புள்ளிகள்)*
 (ii) கணக்காய்வுச் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது கணக்காய்வாளர் நாயகத்திற்குரிய உரித்துகள் *(08 புள்ளிகள்)*
எவை என்பவற்றைக் குறிப்பிடுக.

**5.** (i) 'பெறுகைத் திட்டம் (Procurement Plan)' என்றால் என்னவென்பதை விளக்குக. *(06 புள்ளிகள்)*
 (ii) நிறுவனமொன்றுக்கு பெறுகைத் திட்டமொன்றை தயாரிப்பதனால் பெறக்கூடிய நன்மைகளைப் பெயரிடுக. *(08 புள்ளிகள்)*

**6.** அரசாங்கத் திணைக்களமொன்றுக்காக புதிய உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பதும் அதனை நடைமுறைப்படுத்தலும் தொடர்பாக பின்பற்றவேண்டிய செயன்முறையை விளக்குக. *(13 புள்ளிகள்)*

**7.** கீழ்வரும் தலைப்புகளுக்கு சிறுகுறிப்புகள் எழுதுக.
 (i) அடியிதழ்சேர் புத்தகங்கள்
 (ii) கேள்விப் பிணை (Bid Security)
 (iii) இடமாற்றக் கொடுப்பனவுகள்
 (iv) திறைசேரி குறிப்புகள்

*(04 × 4 = 16 புள்ளிகள்)*

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ... සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கை பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**கணக்காய்வுப் பரீட்சகர் சேவையின் II ஆம் தரத்திலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை** - 2017(I) (2019)

Efficiency Bar Examination for Officers in Grade II of Audit Examiners' Service -2017 (I) (2019)

**(04)** தாபன ஒழுங்குவிதிகள்
Establishments Procedure

**இரண்டு மணித்தியாலங்கள்**
Two hours

முதலாம் வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

---

**1.** கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக தாபன விதிக்கோவைக்கேற்ப சுருக்கக் குறிப்புகள் எழுதுக.

(i) சரிசெய்கைப்படி

(ii) மாற்றப்பட்ட படிகள்

(iii) பொருளாதார (வீட்டு) வாடகை

(iv) விழா முற்பணக் கொடுப்பனவு *(05 × 4 = 20 புள்ளிகள்)*

**2.** (i) நிரந்தர ஓய்வூதிய பதவியொன்றை வகிக்கின்ற அல்லது வகிக்காத அலுவலர் ஒருவருக்கு திடீர் விபத்து விடுமுறையும் விசேட சுகயீன விடுமுறையும் பெற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் **நான்கினைக்** குறிப்பிட்டு அவற்றில் பெற்றுக் கொள்ளக்கூடிய விடுமுறை கால அளவை தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க விளக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) அரசாங்க அலுவலர் ஒருவருக்கு இந்நாட்டில் அல்லது வெளிநாட்டில் முழுச் சம்பளத்துடனான கற்கை (படிப்பு) விடுமுறை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் **ஐந்தினைக்** குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

**3.** (i) அரசாங்க சேவையில் பின்வரும் ஒவ்வொரு பதவிக்குமான நியமன அதிகாரி யாரென்பதைக் குறிப்பிடுக.

(அ) மேலதிக செயலாளர்

(ஆ) கணக்காய்வுத் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள்

(இ) மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர்

(ஈ) தேர்தல் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள்

(உ) திணைக்களத் தலைவர்கள்

(ஊ) இணைந்த சேவைக்குரிய பதவிநிலைத் தரத்திலுள்ள அலுவலர்கள்

(எ) அமைச்சொன்றின் கீழ் கொண்டு வரப்படாத மற்றும் இணைந்த சேவைக்கு உரித்தல்லாத பதவிநிலைத் தரத்தின் அலுவலர் ஒருவர்

(ஏ) சிரேஷ்ட உதவிச் செயலாளர் *(10 புள்ளிகள்)*

(ii) பதவிநிலைத் தரத்தின் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யும் போது திணைக்களத் தலைவர் ஒருவரின் மற்றும் நியமன அதிகாரி ஒருவரின் கடமைப் பொறுப்புகளை வெவ்வேறாக விளக்குக. *(10 புள்ளிகள்)*

**4.** (i) தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV இல் 10 ஆவது பிரிவின் கீழ் அரச அலுவலர் ஒருவருக்கு இடர்க்கடன் மற்றும் வேறு கடன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் **எட்டினைக்** குறிப்பிட்டு இவற்றில் பெற்றுக் கொள்ளக்கூடிய கடன் தொகை அளவினையும் குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

(ii) தாபனக் கோவையின் அத்தியாயம் XXIV இல் 11 ஆவது பிரிவின் கீழ் அரசின் பரிந்துரைக்கிணங்க வங்கியொன்றிலிருந்து பெற்றுத் தரப்படுகிற ஆதனக் கடனைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விடயங்கள் **ஆறினைக்** குறிப்பிட்டு அதற்காக அரசாங்க அலுவலர் ஒருவருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் **நான்கினையும்** பெயரிடுக. *(10 புள்ளிகள்)*

[பக். 2 ஐப் பார்க்க

**5.** (i) தாபனக் கோவையின் ஏற்பாடுகளின்படி அரசியல் உரிமைகளை அனுபவித்திட உரித்தல்லாத அலுவலர்கள் யாரென்பதைக் குறிப்பிட்டு அவர்களுக்கு உரித்து நீக்கப்பட்டுள்ள அரசியல் உரிமைகளை விளக்குக.

*(10 புள்ளிகள்)*

(ii) அரசியல் உரிமைகளை அனுபவித்திட உரித்துடைய அலுவலர் ஒருவருக்கு உரித்தான அரசியல் உரிமைகளைக் குறிப்பிட்டு அவற்றுக்காக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை சுருக்கமாக விளக்குக.

*(10 புள்ளிகள்)*

**6.** (i) உத்தியோகபூர்வ எழுத்தாவணங்களை அழிக்கும் போது **அழிக்கக்கூடாத** ஆவணங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ள கோப்புகள் அல்லது ஆவணங்கள் **பத்தின்** பெயர்களை எழுதுக. *(10 புள்ளிகள்)*

(ii) அழிக்கப்பட்டுவிட்ட ஒவ்வொரு ஆவணம் அல்லது அறிக்கை தொடர்பாகப் பேண வேண்டிய ஆவணமொன்றில் உள்ளக்கப்பட வேண்டிய விடயங்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக. *(10 புள்ளிகள்)*

**7.** (i) ஒழுக்காற்று அதிகாரிக்கு உடன் செயற்படுத்தும் விதத்தில், அரசாங்க அலுவலர் ஒருவரை பணித் தடைக்கு உட்படுத்தக் காரணமாகக்கூடிய ஒழுங்கீனமான செயற்பாடுகள் **பத்தினைக்** குறிப்பிடுக.

*(10 புள்ளிகள்)*

(ii) பொதுசன ஊடகங்களுக்கு செய்திகளை வெளியிடுவதற்கு உரிமையுடைய செயலாளர் ஒருவருக்கு அல்லது திணைக்களத் தலைவருக்கு இருக்கின்ற வரையறைகளையும் பொறுப்புகளையும் விளக்குக.

*(10 புள்ளிகள்)*

* * *